FTJ

**10 ஆம் வகுப்பு**

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023
# தமிழ்

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 100

பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15 X 1 = 15

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்?
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
2. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" - பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை
3. காலம் கரந்த பெயரெச்சம் என்பது .... அ) வினைத் தொகை ஆ) உம்மைத் தொகை இ) பண்புத் தொகை ஈ) அன்மொழித் தொகை
4. காசிக் காண்டம் என்பது .......... அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர் இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்
5. மருந்தே ஆயினும் விருந்தொடு உண் என்னும் அடிகள் இடம் பெற்றுள்ள நூல் ..........
அ) குறுந்தொகை ஆ) கொன்றை வேந்தன் இ) திருக்குறள் ஈ) நற்றிணை
6. "எய்துவர் எய்தாப் பழி" இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்ப்பாடு எது?
அ) கூவளம், புளிமா, நாள் ஆ) தேமா, புளிமா, காசு இ) கூவிளம், தேமா, மலர் ஈ) புளிமா, தேமா, பிறப்பு
7. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது? அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
8. "அருளைப் பெருக்கி அறிவினை திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை" - என்ற அடிகளில் குறிப்பிடுவது எது? அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்
9. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன? அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால் இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்
10. முல்லை நிலத்தின் சிறுபொழுது ......... அ) யாமம் ஆ) மாலை இ) வைகறை ஈ) எற்பாடு
11. பின்வருவனற்றுள் கூரான ஆயுதம் எது என்று வள்ளுவர் கூறுகிறார்?
அ) பெரிய கத்தி ஆ) இரும்பு ஈட்டி இ) வில்லும் அம்பும் ஈ) உழைத்ததால் கிடைத்த ஊதியம்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

*"விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்*
*கரு வளர் வானத்து இசையில் தோன்றி*
*உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்*
*உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்"*

12. இப்பாடலின் ஆசிரியர்? அ) கீரந்தையார் ஆ) பூதஞ்சேந்தனார் இ) நப்பூதனார் ஈ) குலசேகராழ்வார்
13. இப்பாடலில் பயின்று வந்துள்ள அடி எதுகையைக் குறிப்பிடுக.
அ) விசும்பில், கருவளர் ஆ) உருஅறி, உந்து வளி இ) கருவளர், உருஅறி ஈ) உந்துவளி, ஊழி ஊழ்
14. பாடலில் உணர்த்தப்படும் கருத்து அ) தத்துவக் கருத்து ஆ) அறிவியல் செய்தி இ) நிலையாமை ஈ) அரசியல் அறம்
15. ஊழ் ஊழ் - இலக்கணக் குறிப்பு அ) இரட்டைக் கிளவி ஆ) பண்புத்தொகை இ) அடுக்குத் தொடர் ஈ) வினைத் தொகை

பகுதி -II (மதிப்பெண்கள் - 18) பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி. (21 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்) 4 X 2 = 8

16. தமிழ்நாட்டு நெல் வகைகள் சில கூறுக.
17. *விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.*
அ) திருமூலர் தம் திருமந்திரத்தில் மூச்சுப்பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியுள்ளார்.
ஆ) செயற்கை நுண்ணறிவு பொதிந்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை.
18. வசன கவிதை - குறிப்பு வரைக.
19. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.
20. குறிப்பு வரைக - சதாவதானம்.
21. 'செயல்' என முடியும் திருக்குறளை அடிமாறாமல் எழுதுக.

பிரிவு - 2 எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5 X 2 = 10

22. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
23. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக. மலை - மாலை
24. 'தணிந்தது' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
25. *கலைச்சொற்கள் தருக.* அ) Modern literature ஆ) Cosmic rays
*செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா.*
பூ, மழை, தேன், மலை (சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் இரண்டினை எழுதுக).
26. தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.
அ) அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தாள் *(கலவைச் சொற்றொடராக மாற்றுக)*
ஆ) ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன் அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது. *(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)*
27. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க. (புதுமை, காடு, காற்று, நறுமணம்)
அ) பழமைக்கு எதிரானது. எழுது கோலில் பயன்படும். ஆ) இருக்கும் போது உருவமில்லை. இல்லாமல் உயிரினம் இல்லை.
28. எதிர்மறையாக மாற்றுக. அ) அருகில் அமர்க ஆ) எழுதாக் கவிதை

பகுதி - III (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 X 3 = 6

29. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வது போல் ஓர் உரையாடல் எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
ஜெர்மனியில் ஓர் ஆண்டில் பிற மொழிகளிலிருந்து 5000 நூல்கள் வரை மொழிபெயர்க்கப்படுகின்றன. புள்ளி விவரப்படி அதிகமான தமிழ்நூல்கள் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவ்வரிசையில் முதலிடம் ஆங்கிலம், இரண்டாமிடம் மலையாளம். மொழி பெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது.
அ) ஜெர்மனியில் ஓர் ஆண்டில் எத்தனை நூல்கள் வரை மொழிபெயர்க்கப்படுகின்றன?
ஆ) தமிழ் நூல்கள் எந்த மொழியில் அதிக அளவில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது? இ) மொழிபெயர்ப்பின் பயன் என்ன?

31. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்து சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

பிரிவு- 2 எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.
(34 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்). 2 X 3 = 6

32. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது? ஏன்? விளக்கம் தருக.
33. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை எழுதுக.
34. *அடிபிறழாமல் எழுதுக.* அ) 'அன்னை மொழியே' - எனத் தொடங்கும் பாவலரேறு பாடல்.
ஆ) தண்டலை அல்லது - எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

பிரிவு - 3 எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 X 3 = 6

35. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
36. தற்குறிப்பேற்ற அணியினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
37. கொண்டு கூட்டுப் பொருள்கோளினை விளக்கி, எடுத்துக்காட்டுடன் கூறுக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 X 5 = 25

38. அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. *(அல்லது)*
ஆ) வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதை குறள் வழி விளக்குக.
39. அ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. *(அல்லது)*
ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.
40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. அழகன் தன் தந்தை தமிழினியன் அவர்களிடம் நூலகத்தில் உறுப்பினர் ஆக வேண்டினான். அவரும் அழகனிடம் ரூபாய் 200, 39, கபிலன் நகர், கடம்பவனம், தூத்துக்குடி மாவட்டம் என்ற முகவரியிட்ட அடையாளச் சான்றையும் கொடுத்தார். தேர்வர் தன்னை அழகனாகக் கருதி, நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.
42. அ) பள்ளியிலும் வீட்டிலும் நீங்கள் நடந்துகொள்ளும் முறைகளைப் பட்டியலிடுக. *(அல்லது)*
ஆ) *மொழிபெயர்க்க.*
Respected ladies and gentleman, I am Ilangovan, studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature show that Tamil were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammer for language have also defined grammer for life. Tamil culture is rooted in the life styles of Tamil throughout India, Srilanka, Malaysia, Singapore, England and worldwide. Though our culture is very old it has been updated consistently. We should feel proud about culture. Thank you one and all.

குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
மேற்கு என்பதற்குக் குடக்கு என்னும் பெயருண்டு. மேற்கிலிருந்து வீசும் போது நான் கோடை எனப்படுகிறேன். மேற்கிலிருந்து அதிக வலிமையோடு வீசுகிறேன். வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் வெப்பக் காற்றாகிறேன். வடக்கு என்பதற்கு வாடை என்றும் பெயருமுண்டு. வடக்கிலிருந்து வீசும் போது நான் வாடை காற்று எனப்படுகிறேன். நான் பனிப்பகுதியிலிருந்து வீசுவதால் மிகவும் குளிர்ச்சியான ஊதைக் காற்று எனவும் அழைக்கப்படுகிறேன்.
i) மேற்கிலிருந்து வீசும் காற்று யாது? ii) ஊதைக்காற்று என்று அழைப்பதேன்? iii) மேற்கு என்பதன் மற்றொரு பெயர் என்ன?
iv) வாடை என்பது எத்திசையைக் குறிக்கிறது? v) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பினை தருக.

## பகுதி - V (மதிப்பெண்கள் - 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3 X 8 = 24

43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக. *(அல்லது)*
ஆ) நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகி வருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன - இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.
44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப் பகுதி கொண்டு விவரிக்க. *(அல்லது)* ஆ) மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றி உங்களின் கருத்துகளை விவரிக்கவும்.
45. அ) குறிப்புகளைக் கொண்டு "சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.
முன்னுரை - தமிழன்னையின் அணிகலன்கள் - தமிழ்ச் சான்றோர் - தமிழின் வளர்ச்சி - தமிழின் எதிர்காலம் - முடிவுரை.
*(அல்லது)* ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.
முன்னுரை - அரசுப் பொருட்காட்சி அமைவிடம் - பல்வித அரங்குகள் - நடைபெற்ற நிகழ்ச்சிகள் - அடைந்த உணர்வுகளும் நன்மைகளும் - முடிவுரை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com